# தமிழ் இணையக் கல்விக்கழகம்

**TAMIL VIRTUAL ACADEMY - CHENNAI - 600 025**

**CERTIFICATE COURSE - MARK SHEET / Student Sheet**

**Level: Uagaram(UM00) / உகரம்**

| | | | |
|---|---|---|---|
| **Centre Name** | | **Date** | |
| **Student Name** | தமிழில் : <br> In English : | **Registration No.** | |
| **Period** | **Jan-Feb _____/ July-Aug _____** | **Invigilator Name & Sign** | |

| Title | Max.Marks | Obtained Marks |
|---|---|---|
| Written Mark /எழுத்துத் தேர்வு | 75 | |
| Online Mark / இணையவழித் தேர்வு மதிப்பெண் | 25 | |
| Total Mark / மொத்த மதிப்பெண் | 100 | |

| Answer Paper Evaluator Name & Sign<br>விடைத்தாள் மதிப்பீட்டாளர் பெயர் & கையொப்பம் | Tamil Virtual Academy Authority Name & Sign<br>தமிழ் இணையக் கல்விக்கழக<br>அலுவலர் பெயர் & கையொப்பம் |
|---|---|
| | |

# ஜனவரி – பிப்ரவரி 2026
## உகரம் (UM00)
## எழுத்துத் தேர்வு (Written Examination)

**நேரம்: 2 : 00 மணி நேரம்** **மதிப்பெண்: 75**

### பகுதி – அ
### படித்தல் திறன்

**I. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
*(Read the following paragraph and answer each question given below in a sentence)*

**(5 x 1 = 5)**

**நுட்பமான அறிவு**

பேராசிரியர் ஒருவர் தம் நண்பர்களுடன் எகிப்து பிரமிடுகளைப் பார்க்கச் சென்றார். அப்போது நண்பர்களுள் ஒருவர், பேராசிரியரிடம் 'இந்தப் பிரமிடின் உயரத்தைச் சரியாகக் கூறமுடியுமா?' என்று கேட்டார். அதற்குப் பேராசிரியர் 'முடியும்' என்றார். அருகில் இருந்தவர்கள் பேராசிரியர் கூறியதை நம்ப மறுத்தனர். பேராசிரியர் உடனே தம் கையில் வைத்திருந்த அளவுநாடாவைக் (Tap) கொண்டு பிரமிடின் நிழலை அளந்தார். பிறகு அதே டேப்பில் தம் நிழலை அளந்தார். தம் நிழலையும் உயரத்தையும் கணக்கிட்ட அவர், பிரமிட்டின் உயரத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டுச் சொன்னார். நண்பர்கள் பேராசிரியரின் அறிவை வியந்து பாராட்டினர். அப்பொழுது பேராசிரியர் 'நண்பர்களே இந்த உலகில் இயலாத செயல் என்று எதுவும் இல்லை. எதற்கும் எளிய வழி ஒன்று உள்ளது' என்று கூறினார்.

**வினாக்கள் :–**

1. பேராசிரியர் தம் நண்பர்களுடன் எங்குச் சென்றார்?

––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––

2. நண்பர், பேராசிரியரிடம் என்ன கேட்டார்?

––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––

3. பிரமிடின் உயரத்தை அளக்க பேராசிரியர் பயன்படுத்திய பொருள் எது?

––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––

4. பேராசிரியர் பிரமிடின் உயரத்தை எவ்வாறு கணக்கிட்டார்?

––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––

5. தம்மைப் பாராட்டிய நண்பர்களிடம் பேராசிரியர் என்ன கூறினார்?

––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––

**II. கீழ்க்காணும் விளம்பரத்திலுள்ள செய்திகளைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

***Read the messages in the advertisement given below and Answer the Following Questions.*** **(5 x 1 = 5)**




**வினாக்கள் :–**

1. செய்தி எதனைப் பற்றியது?

______________________________________________________________

2. செய்தியை வெளியிட்டோர் யார்?

______________________________________________________________

3. யார் யார் மாநாட்டைச் சிறப்பிக்க உள்ளனர்?

______________________________________________________________

4. மாநாட்டில் நடைபெற இருக்கும் போட்டி யாது?

______________________________________________________________

5. மாநாட்டிற்கான நாள் செய்தியில் இடம்பெற்றுள்ளதா?

______________________________________________________________

## பகுதி – ஆ
## இலக்கணப் பகுதி

**III. பொருத்தமான சொல்லைக் கொண்டு தொடரை நிறைவு செய்க.**

***(Complete the sentence with the correct word)*** **(5 x 1 = 5)**

1. பார்க்க உதவுவது ____________ (கண்/ கன்)

2. நண்பர்கள் ____________ (வந்தனர்/ வந்தநர்)

3. பூனைக்குப் பிடித்தது ____________ (பால்/ பாழ்)

4. மீன் பிடிக்க உதவுவது ____________ (வளை / வலை)

5. மனத்தில் ____________ (உறுதி/ உருதி) வேண்டும்.

**IV. பொருத்துக. *( Match the following)*** **(5 x 1 = 5)**

| | | |
|---|---|---|
| 1. குறிஞ்சி | – | வயல் |
| 2. முல்லை | – | கடல் |
| 3. மருதம் | – | காடு |
| 4. நெய்தல் | – | மணல் |
| 5. பாலை | – | மலை |

**V. பின்வரும் தொடர்களில் பொருத்தமான வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.**

***(Make the new sentence without changing the meaning.)*** **(2 x2.5 = 5)**

1. அழகன் வரைந்தான்.

____________________________________________________________

2. கலையரசன் பேசினாள்.

____________________________________________________________

## பகுதி – இ
## படிப்போம் பகுதி

**VI. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு சொல் / ஒரு தொடரில் விடையளிக்கவும்.**
***(Answer all questions in a word / line)*** **(5 x 1 = 5)**

1. மொழி எதற்கு உதவுகிறது?

______________________________________________________

2. எழுத்துரு என்றால் என்ன?

______________________________________________________

3. விருந்தினர் என்பவர் யார்?

______________________________________________________

4. ஹனாமி என்று எதனை அழைப்பர்?

______________________________________________________

5. தொல்காப்பியம் என்னும் நூலின் ஆசிரியர் யார்?

______________________________________________________

**VII. கீழ்க்காணும் வினாக்களுக்கு எவையேனும் இரண்டனுக்கு மட்டும்.**
***(Answer the following any two)*** **(2 x 5 = 10)**

1. தமிழர்கள் எத்தகைய உணவு முறையைப் பின்பற்றினர்?
2. மண்டேலா சிறையில் அடைந்த துன்பங்கள் யாவை?
3. ஐவகை நிலங்களின் பெயர்களை எழுதுக.
4. வேளாண்மையில் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் முறைகளைக் கூறுக.
5. உமக்குத் தெரிந்த நூலகங்கள் ஐந்தின் பெயரினை எழுதுக.

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

_____________________________________________________________

_____________________________________________________________

_____________________________________________________________

_____________________________________________________________

_____________________________________________________________

_____________________________________________________________

_____________________________________________________________

## பகுதி – ஈ
## செய்யுள் பகுதி

**VIII. கீழ்க்காணும் திருக்குறளில் உள்ள விடுபட்ட சொல்லை நிரப்புக.**
***(Fill in the Blanks)*** **(5 x 1 = 5)**

1. எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு

   அவ்வது உறைவது ____________.

2. தன்நெஞ் சறிவது பொய்யற்க ______________

   தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

3. ______________ ஈட்டலும் காத்தலும் காத்த

   வகுத்தலும் வல்ல தரசு.

4. கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்

   ____________ செலச்சொல்லு வார்.

5. அறத்தான் வருவதே _____________ மற்றெல்லாம்

   புறத்த புகழும் இல.

**IX. கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளிக்க.** ***(Answer any two questions.)*** **(2 x 5 = 10)**

1. குமரகுருபரர் கூறும் நீதிநெறிவிளக்கம் கருத்துகளைக் கூறுக.
2. விருந்து உபசரிக்கும் முறையைப் பற்றிப் பாரதிதாசன் கூறுவன யாவை?
3. எவரெல்லாம் துன்புற்று வாழமாட்டார்கள் என்று நாலடியார் கூறுகிறது?
4. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு குறித்து ஔவையார் கூறும் கருத்தை விளக்குக.
5. அறம் என்பது யாது?

## பகுதி – உ
## மொழிபெயர்ப்போம் பகுதி

**X. மொழிபெயர்க்க *Translate.*** **(2 x 2.5 = 5)**

**அ) கீழ்க்காணும் தொடர்களைத் தமிழில் மொழிபெயர்க்க.**

Exercise is any physical activity that we perform for relaxing our body and taking away all the mental stress.

____________________________________________________________

**ஆ) கீழ்க்காணும் தொடர்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க.**

உலக மக்கள் அனைவரையும் சமமாகக் கருதி, அன்பு காட்டவேண்டும்.

__________________________________________________________

__________________________________________________________

## பகுதி – ஊ
## படைப்பாற்றல் பகுதி

**XI. கீழ்க்காணும் சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களாக எழுதுக.**
***(Form meaningful sentences using the following words)*** **(2 x 2.5 = 5)**

1. துறைமுகம்

__________________________________________________________.

2. பாகங்கள்

__________________________________________________________.

**XII. கீழே கொடுக்கப்பட்டுள்ள உரைநடை, வரிசைப்படுத்தல், உரையாடல் ஆகிய தலைப்புகளில் ஏதேனும் ஒன்றிக்கு ஐந்து தொடர்களில் எழுதுக. (1x 10 = 10)**
***(Write five lines on any one of the following topics: prose, sequencing, and dialogue)***

1. **உரைநடை**
   "வானவில்" என்னும் தலைப்பினைக் கொண்டு ஐந்து வரி எழுதுக.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

________________________________________________________

________________________________________________________

**2. கலைந்துள்ள கதையின் வரிகளை வரிசைப்படுத்துக.**

1. போட்டி நடைபெறுவதற்குப் பதினைந்து நாள் இருந்தது.
2. போட்டியில் தமிழ்மணி வெற்றி பெறக்கூடாது எனப் பொன்னன் நினைத்தான்.
3. பள்ளியில் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி அறிவிக்கப்பட்டது.
4. போட்டி நடைபெறுவதற்கு ஒருவாரத்திற்கு முன்பு, தமிழ்மணியின் திருக்குறள் புத்தகத்தை எடுத்து மறைத்து வைத்தான்.
5. எந்தச் செயலையும் காலம் கருதிச் செயல்பட்டால் வெற்றி நிச்சயம் என்பதைப் பொன்னன் உணர்ந்துகொண்டான்.
6. தமிழ்மணியும் தன் பெயரைப் பதிவு செய்தான்.
7. தமிழ்மணி நேரத்தை வீணாக்காமல், முதல் வாரத்திலேயே போட்டிக்குத் தேவையான குறள்களை நன்கு படித்துவிட்டான்.
8. மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்ள முன்வந்தனர்.
9. முதற்பரிசு தமிழ்மணிக்கே கிடைத்தது. பொன்னனுக்கு மூன்றாமிடம் கிடைத்தது.
10. தமிழ்மணி எப்படி வெற்றி பெற்றான் எனப் பொன்னன் யோசித்தான்.

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

________________________________________________________


________________________________________________________

________________________________________________________

________________________________________________________

S-2

**3. காட்சிக்குப் பொருத்தமான உரையாடலை எழுதுக.**



-----------------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

****************